Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 2 சென்னை | தினசரி | 4 பக்கம் சனிக்கிழமை, டிசம்பர் 31, 2022 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 170

# மோகனூர் பட்டாசு விபத்து 4 பேர் பலி: 5 பேர் காயம் 20-க்கும் மேற்பட்ட வீடுகள் சேதம்

## சேலம் சரக டிஐஜி பிரவீன் குமார் அபினவ் நேரில் பார்வையிட்டு ஆய்வு



சென்னை, டிசம்பர் 31, 2022: நாமக்கல் அருகே மோகனூரில் தனியாருக்கு சொந்தமான பட்டாசு குடோன் தீப்பற்றி வெடித்ததில் 4 பேர் மரணம் அடைந்தனர். வெடி விபத்தில் 20-க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.

நாமக்கல் மாவட்டம் மோகனூர் அடுத்துள்ளது மேட்டு தெரு. இந்தப் பகுதியில் பல ஆண்டு காலமாக நாட்டு பட்டாசு கடை நடத்தியவர் தில்லை குமார். திருமணம் தவிர இறப்பு நிகழ்வு மற்றும் விழாக்களுக்கு பட்டாசுகளை விற்பனை செய்து வந்தார்.

இந்த நிலையில் புத்தாண்டு தினத்திற்காகவும் வருகிற பொங்கல் தினத்திற்காகவும், திருவிழாவிற்காகவும் ஒரு டன் பட்டாசு உற்பத்தி செய்து மோகனூரில் தன் வீட்டின் அருகே குடோனில் பதுக்கி வைத்திருந்தார். இன்று அதிகாலை 3 மணி அளவில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தால் பட்டாசுகள் வெடித்துச் சிதறின.

இதை அறிந்த பக்கத்து வீட்டார்கள் சுதாகரித்துக் கொண்டு செல்வதற்குள் அருகே படுத்திருந்த பட்டாசு கடை உரிமையாளர் தில்லைகுமார் மற்றும் அவரின் அருகே இருந்த பெரியங்காள் என்ற மூதாட்டி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் தில்லைகுமாரின் மனைவி பிரியா கட்டிட இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரிழந்தார். இதைத் தவிர்த்து மோகனூரில் தில்லைகுமாரின் தாய் செல்வியும் உயிரிழந்தார்.

இது தொடர்பாக உடனடியாக தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு நாமக்கல் பரமத்தி பகுதியில் இருந்து வந்த தீயணைப்பு துறையினர் தீயை அணைத்தனர். பட்டாசு வெடித்துச் சிதறியில் அருகில் இருந்த ஐந்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இவர்கள் நாமக்கல் அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக தொடர்பாக சேலம் சரக டிஐஜி பிரவீன் குமார் அபினவ் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த விபத்து தொடர்பாக மோகனூர் போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# தெலுங்கானா ஆளுநர் மற்றும் புதுச்சேரி துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் ஆங்கில புத்தாண்டு வாழ்த்துச் செய்தி



சென்னை, டிசம்பர் 31, 2022: 2023 ஆம் ஆண்டு அனைத்து மக்களுக்கும் இன்பத்தையும், மகிழ்ச்சியையும், சுகத்தையும் தரும் ஆண்டாக அமைய வேண்டும். இயற்கை வளம் மிகும் ஆண்டாக அனைவருக்கும் அமைதி தரும் ஆண்டாகவும் இந்த ஆண்டு அமைய வேண்டும். வேற்றுமை களைந்து ஒற்றுமையோடு அனைவரும் மகிழ்ச்சியோடு புத்தாண்டை கொண்டாடுவோம். அனைவருக்கும் அனைத்தும் கிடைக்க எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

மேலும் உலக அரங்கில் இந்தியாவை தலை நிமிரச் செய்த மாண்புமிகு பாரதப்பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்கள் தலைமையில் இந்த ஆண்டு ஜி-20 மாநாட்டிற்கு நம் இந்திய திருநாடு தலைமை தாங்குவது ஒவ்வொரு இந்தியருக்கும் பெருமை சேர்க்கிறது. கொரோனா தொற்றினால் வல்லரசு நாடுகளே தடுமாறிக் கொண்டிருக்கின்ற இக்காலக்கட்டத்தில் வாழ்வாதாரத்திலும், பொருளாதாரத்திலும் நம் நாடு முன்னேறிக் கொண்டிருக்கும் பெருமை

கூட்டுவதாக இந்த ஆண்டு அமையட்டும்.... அனைவருக்கும் எனது இனிய ஆங்கில புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்... என்று ஆங்கில புத்தாண்டு வாழ்த்துக்களை நாட்டு மக்களுக்கு தெலுங்கானா ஆளுநர் மற்றும் புதுச்சேரி துணைநிலை□ ஆளுநர் டாக்டர் திருமதி. தமிழிசை சௌந்தரராஜன் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

# என்னைச் சந்திக்க வரும் கழகத்தினர், இனி மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் அத்தியாவசியப் பொருட்களை அன்புப் பரிசாக வழங்க கோரிக்கை - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்



சென்னை, டிசம்பர் 31, 2022: என்னைச் சந்திக்க வரும் கழகத்தினர், இனி மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் அத்தியாவசியப் பொருட்களை அன்புப் பரிசாக வழங்கினால் ஆதரவற்ற குழந்தைகள், முதியோர் காப்பகங்களுக்கு வழங்கி உதவ முடியும் என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கட்சியினருக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

முதலமைச்சரான நமது கழகத் தலைவர், தன்னை சந்திக்க வருபவர்கள் புத்தகங்களை மட்டுமே அளிக்க வேண்டும், மலர் மாலை, பூங்கொத்து, பொன்னாடைகளைத் தவிர்க்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டு, அதன்படியே செயல்பட்டு வருகிறார். அப்படி அவருக்கு வழங்கப்பட்ட புத்தகங்கள், பல்வேறு நூலகங்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன.

இளைஞர் அணி செயலாளராகப் பொறுப்பேற்ற பின்னர், நானும் அப்படி அறிவித்து, எனக்கு அளிக்கப்பட்ட புத்தகங்களை, பல்வேறு அரசுப் பள்ளி நூலகங்களுக்கு அளித்துள்ளோம். அரியலூர் சென்றபோது தங்கை அனிதா பெயரில் இயங்கிவரும் நினைவு நூலகத்துக்குப் புத்தகங்களை வழங்கினோம். தற்போது சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் அமைக்கப்படவுள்ள, நடமாடும் நூலகத்துக்கு சுமார் 2,000 புத்தகங்களை அளித்துள்ளோம். எனக்கு வரும் பரிசு-உணவுப் பொருட்களைத் தொகுதியில் உள்ள ஆதரவற்றோர் இல்லங்களுக்கு அனுப்பி வருகிறோம்.

**கைவினைப் பொருட்கள்**

ஆனாலும், இந்த சால்வை அணிவிப்பதும் பூங்கொத்து கொடுப்பதும் தொடரத்தான் செய்கின்றன. ஒருவருக்கொருவர் சால்வை அணிவித்துக்கொள்வதற்கான தேவைகளை நாம் எட்டிவிட்டோம் என்றே நினைக்கிறேன். சமூகநீதி நோக்கத்தில் நாம் அடுத்த கட்டத்துக்குச் செல்ல, சில பழைய நடைமுறைகளைக் கைவிடலாம் என்பதே இதன் நோக்கம். நமது அன்பு பரிமாற்றத்தில் புத்தகங்கள் இடம்பெற்றதன் மூலம், நாம் அடுத்த கட்ட அறிவு இயக்கத்தைத் தொடங்கி இருக்கிறோம். அதேபோல இப்போது மற்றுமொரு மாற்றத்தை அன்பு இயக்கமாகத் தொடங்கலாம் என நினைக்கிறேன்.

குறிப்பாக, தமிழ்நாட்டில் மகளிர் மேம்பாட்டுக்கென அரசு பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் அளித்து, தொழிற்பயிற்சி அளித்து, அவர்களின் வாழ்க்கையில் புதிய மாற்றங்களை நிகழ்த்தி வருகிறது. அந்த இயக்கத்தில் நாமும் பங்குபெற முடியும். தமிழ்நாடு முழுவதும் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள், பல்வேறு பொருட்களை தயாரித்து வருகின்றனர். சிறுதானியங்களில் மதிப்புக் கூட்டப்பட்ட உணவுப் பொருட்கள், மெழுகுவர்த்தி, அழகுக் கைவினைப் பொருட்கள், வெள்ளிக் கொலுசுகள், தஞ்சாவூர் தலையாட்டிப் பொம்மைகள், மரச் சிற்பங்கள் எனப் பலவற்றைத் தயாரித்து கண்காட்சிகளில் விற்பனைக்கு வைக்கின்றனர்.

**பெண்களின் பொருளாதாரம்**

அமைச்சரான பிறகு அண்மையில் நான் திண்டுக்கல், சிவகங்கை, கோவை, திருச்சி மாவட்டங்களின் நிகழ்ச்சிகளுக்குச் சென்றபோது, அப்படியான தரமான, கலைநயமிக்க பொருட்கள், காட்சிக்கு வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்து வியந்துபோனேன். அவற்றின் தரமும் மிகச் சிறப்பாக இருந்தது. அவற்றுக்கான விற்பனை வாய்ப்புகள் அதிகரிப்பதன் மூலம், அந்தப் பெண்களின் பொருளாதாரம் மேம்படும் என்பதை நாம் அறிவோம்.

ஆகவே, என்னைச் சந்திக்க வரும் கழகத்தினர் இனிமேல் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் அத்தியாவசியப் பொருட்களை அன்புப் பரிசாக வழங்கலாம். இவற்றை ஆதரவற்ற குழந்தைகள், முதியோர் காப்பகங்களுக்கு வழங்க முடிவு செய்துள்ளோம். புத்தகங்கள், கழக வேட்டி-துண்டுகளை எப்போதும்போல் வழங்கலாம். ஆனால், பட்டு சால்வை, பூங்கொத்து போன்றவற்றை அறவே தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த முடிவால் வழங்கும் நீங்களும் மகிழ்வீர்கள், உங்கள் மூலம் பலன் பெறுபவர்களும் மகிழ்வார்கள். இவற்றை எண்ணி நானும் மகிழ்ச்சி கொள்வேன். இந்த எளிய வேண்டுகோள் - ஏற்றமிகு மாற்றங்களை ஏற்படுத்தும் என நம்புகிறேன்" என அமைச்சர் உதயநிதி கூறியுள்ளார்.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

# சென்னையில் பனிமூட்டம்: 14 விமான சேவை பாதிப்பு



சென்னை, டிசம்பர் 31, 2022: பனிமூட்டம் காரணமாக சென்னையில் 14 விமானங்களின் சேவையில் பாதிப்பு ஏற்பட்டது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று காலையில் கடுமையான பனிமூட்டம் இருந்தது. காலை 7 மணிக்குக் கூட பனிமூட்டத்தால் எதிரில் வரும் வாகனங்கள் தெரியாத அளவுக்கு பனி அதிகரித்து காணப்பட்டது. இதனால், வாகனங்களில் முகப்பு விளக்குகளை ஒளிரவிட்டபடி சென்றனர். அலுவலகங்களுக்குச் செல்பவர்கள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகினர்.

சென்னை கோயம்பேடு, வடபழனி, வளசரவாக்கம், அண்ணாநகர் ஆகிய பகுதிகளில் பனி மூட்டம் காணப்பட்டது. இதேபோன்று சென்னை புறநகர்ப் பகுதிகளான ஆவடி, அம்பத்தூர், மணலி, கும்மிடிப்பூண்டி நெடுஞ்சாலையிலும் அதிக அளவு பனியால் வாகனங்கள் மெதுவாகச் சென்றன.

பனிமூட்டம் காரணமாக சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தின் ஓடுபாதை சரியாக தெரியவில்லை. காலை 8 மணி அளவில் மும்பையில் இருந்து 129 பயணிகளுடன் சென்னை வந்த விமானம் பனிமூட்டம் காரணமாக வானத்தில் வட்டமிட்டது. பின்னர் தரையிறங்க முடியாமல் பெங்களூருக்கு திருப்பி விடப்பட்டது. அதேபோல் மலேசியா தலைநகர் கோலாலம்பூரில் இருந்து சென்னை வந்த 2 விமானங்கள், பெங்களூரு, கொல்கத்தா, கோவை, ஐதராபாத் உள்ளிட்ட நகரங்களில் இருந்து வந்த விமானங்களும் வானத்தில் வட்டமடித்து அரை மணி நேரத்திற்கு பிறகு தாமதமாக தரையிறங்கின. அதே போல் சென்னையில் இருந்து மஸ்கட், லண்டன், கோலாலம்பூர், கொல்கத்தா உள்ளிட்ட 7 நகரங்களுக்கு செல்ல விருந்த விமானங்களும் தாமதமாக புறப்பட்டு சென்றன. பனிமூட்டம் காரணமாக விமானம் தாமதம் என்பது விமான நிலையங்களுக்கு வந்த பிறகே பயணிகளுக்கு தெரியவந்ததால் அவதிக்குள்ளாகினர்.

# நோபல் பரிசு பெற்ற மியான்மர் ஜனநாயக கட்சித் தலைவர் ஆங் சான் சூகிக்கு மொத்தமாக 33 ஆண்டுகள் சிறை தண்டனை



சென்னை, டிசம்பர் 31, 2022: மியான்மர் நாட்டின் ஜனநாயகக் கட்சித் தலைவரான நோபல் பரிசு பெற்ற ஆங் சான் சூகிக்கு அந்நாட்டு ராணுவ நீதிமன்றம் மேலும் 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து, மொத்த தண்டனை காலத்தை 33 ஆண்டுகளாக உயர்த்தியுள்ளது.

மியான்மரில் கடந்த 2020-ஆம் ஆண்டு நடைபெற்ற தோதலில் ஆங் சான் சூகி (வயது 77) தலைமையிலான தேசிய ஜனநாயகக் கட்சி அமோக வெற்றி பெற்று ஆட்சியமைத்தது. எனினும், அந்தத் தோதலில் முறைகேடுகள் நடைபெற்றக் கூறி அவரது ஆட்சியை அந்நாட்டு ராணுவம் கடந்த ஆண்டு பிப்ரவரி 1-ஆம் தேதி கலைத்தது.

அத்துடன், அவரையும் மற்ற அரசியல் தலைவர்களையும் கைது செய்து அவர்கள் மீது பல்வேறு வழக்குகளை ராணுவ ஆட்சியாளர்கள் பதிவு செய்துள்ளனர். அந்த வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவாகளுக்கு கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, ஆயுதப் போராட்டத்தை ஊக்குவித்ததாக ஆங் சான் சூகி ஆட்சியில் எம்.பி.யாக இருந்தவர் உள்ளிட்ட 4 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு, அந்த தண்டனை கடந்த ஜூலை மாதம் நிறைவேற்றப்பட்டது. இதற்கு சா□வதேச நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தன.

இந்த நிலையில், அனுமதியில்லாமல் கம்பியில்லா தொலைத் தொடர்பு சாதனங்களை வைத்திருந்தது, கொரோனா விதிகளை மீறியது போன்ற பல்வேறு குற்றச்சாட்டுகளில் ஆங் சான் சூகிக்கு ஏற்கெனவே 26 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் நேற்று மேலும் 5 வழக்குகளை விசாரித்த மியான்மர் ராணுவ நீதிமன்றம் தற்போது மேலும் 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் ஆங் சான் சூகிக்கு மொத்தமாக 33 ஆண்டுகள் சிறைதண்டனை விதிக்கப்பட்டுள்ளது

ஏற்கெனவே, மியான்மரில் மக்களாட்சியை அமைக்க வலியுறுத்திப் போராடி வந்த ஆங் சான் சூகியை ராணுவ ஆட்சியாளர்கள் பல ஆண்டுகளாக சிறையில் அடைத்திருந்தனா. அந்தப் போராட்டத்துக்காக, ஆங் சான் சூகிக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது நினைவு கூரத்தக்கது.

# குஜராத்தில் இன்று காலை பேருந்து-கார் மோதிக்கொண்ட விபத்தில் 9 பேர் பலி பிரதமர் மோடி இரங்கல்; தலா ரூ.2 லட்சம் நிவாரணம் அறிவிப்பு



சென்னை, டிசம்பர் 31, 2022: குஜராத் மாநில நெடுஞ்சாலையில் இன்று அதிகாலையில் பேருந்தும் காரும் மோதி கொண்ட விபத்தில் பஸ் டிரைவர் உள்பட 9 பேர் உயிரிழந்தனர்.

குஜராத் மாநிலத்தில் உள்ள அகமதாபாத் - மும்பை நெடுஞ்சாலையில் நவ்சாரி என்ற பகுதியில் இன்று காலையில் சென்று கொண்டிருந்த சொகுசு பேருந்தும், காரும் நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டது. பேருந்தை ஓட்டி வந்த ஓட்டுநருக்கு திடீர் மாரடைப்பு ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்து விட்டதால், பேருந்து கட்டுப்பாட்டை இழந்ததாக கூறப்படுகிறது. இந்த விபத்தில் கார் முற்றிலும் உருக்குலைந்து போனது. பேருந்தின் முன்பக்கம் பலத்த சேதமடைந்தது.

இந்த கோர விபத்தில் சிக்கி காரில் பயணத்தில் 9 பேரில் 8 பேர் உயிரிழந்தனர். பேருந்தில் பயணித்த 28 பேர் காயமடைந்துள்ளனர். அவர்கள் அருகிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் படுகாயமடைந்து உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்த ஒருவர் சூரத் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். விபத்து ஏற்பட்டதும் அக்கம் பக்கத்தினர் மீட்பு பணியில் ஈடுபட்டனர் என்று கூறப்படுகிறது.

விபத்து குறித்து தகவல் அறிந்த நவ்சாரி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ரிஷிகேஸ் உபாத்யாயா மற்றும் துணை காவல் கண்காணிப்பாளர் வி.என். பட்டேல் ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தேவையான உதவிகளை செய்து விசாரணை மேற்கொண்டனர். மேலும் காயம் அடைந்தவர்கள் சூரத் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்திற்கான காரணம் குறித்து காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் இந்த விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் வெளியிடப்பட்டுள்ள டுவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:- “நவ்சாரியில் சாலை விபத்தில் உயிர்களை இழந்தது வேதனை அளிக்கிறது. உயிரிழந்தவர்களின் குடும்பங்களுடன் என் எண்ணங்கள் உள்ளன. காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைவார்கள் என நம்புகிறேன். உதவித் தொகையாக பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு ரூ.2 லட்சமும் காயமடைந்தவர்களுக்கு தலா ரூ. 50 ஆயிரமும் வழங்கப்படும்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் விபத்து குறித்து தகவல் அறிந்து உள்துறை அமைச்சர் அமித் ஷா தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

# 2022-ம் ஆண்டுக்கான டாடா க்ரூசிபிள் கார்பரேட் குவிஸ் போட்டியின் க்ளஸ்டர் 5 இறுதிப்போட்டியில் பார்க்ளே நிறுவனத்தைச் சேர்ந்த ப்ரீதம் உபாத்யா, வெற்றி!!




சென்னை, டிசம்பர் 31, 2022: 19-வது முறையாக நடைபெற்ற இந்தியாவின் மிகவும் பெருமைக்குரிய வர்த்தக வினாடி வினா போட்டியான டாடா க்ரூசிபிள் கார்பரேட் குவிஸ் 2022-ன் க்ளஸ்டர் 5 இறுதிப்போட்டியில் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளார் பார்க்ளே நிறுவனத்தின் சென்னை கிளையில் பணியாற்றும் ப்ரீதம் உபாத்யா.

சென்னையில் நடைபெற்ற க்ளஸ்டர் 5 இறுதிப்போட்டியானது ஆற்றல் மிகு வினாடி வினாவை வெளிக்காட்டுவதாக அமைந்தது. டாடா கன்சல்டன்ஸி சர்வீசஸ் நிறுவனத்தின் பிஸினெஸ் ட்ரான்ஸ்ஃபர்மேஷன் பிரிவு டெலிவரி ஹெட் மற்றும் மூத்த துணைத்தலைவர் எஸ்.சுகன்யா, மெய்நிகர் முறையில் நடைபெற்ற பரிசு வழங்கும் விழாவில் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசுகளை வழங்கிச் சிறப்பித்தார். இதில் வெற்றி பெற்றவருக்கு ரூ.35,000/-* ரொக்கப்பரிசு கிடைத்ததோடு, தேசிய அளவிலான இறுதிப்போட்டிக்குத் தகுதி பெறும் அரையிறுதியில் போட்டியிடும் வாய்ப்பும் கிடைத்துள்ளது. சென்னை டிசிஎஸ்ஸை சேர்ந்த ஜெயகாந்தன் ஆர் இரண்டாம் இடம் பெற்று ரூ. 18, 000/-* மதிப்புள்ள ரொக்கப்பரிசை பெறுவதாக அறிவிக்கப்பட்டது. கடந்த இரண்டாண்டுகளாக ஆன்லைன் முறையில் டாடா க்ரூசிபிள் போட்டிகள் நடத்தப்பட்டதன் தொடர்ச்சியாக, இவ்வாண்டும் ஆன்லைனிலேயே இந்நிகழ்வு நடத்தப்பட்டது. நாடு முழுவதும் 12 க்ளஸ்டர்கள் பிரிக்கப்பட்டன. இரண்டு நிலைகளில் நடந்த ஆரம்பகட்ட ஆன்லைன் தேர்வுகளுக்குப் பின்னர், ஒவ்வொரு க்ளஸ்டரிலும் முதல் 12 இடங்களைப் பிடித்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அதில் 6 இடங்களைப் பிடித்தவர்களுக்கு ஆன்லைனில் நடத்தப்பட்ட க்ளஸ்டர் இறுதிப்போட்டியில் பங்கேற்க வாய்ப்பளிக்கப்பட்டது; மொத்தமுள்ள 12 க்ளஸ்டர்களிலும் மீதமுள்ளவர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டு, அவர்களில் சிலர் மட்டும் வைல்டு கார்ட் மூலம் இறுதிப்போட்டியில் பங்கேற்க ஏற்பாடு செய்யப்பட்டது. 12 க்ளஸ்டர்களிலும் நடத்தப்பட்ட இறுதிப்போட்டியில் வெற்றி பெற்ற ஒவ்வொருவரும் அரையிறுதியில் பங்கேற்று, அதிலிருந்து 6 பேர் மட்டும் தேசிய அளவிலான இறுதிப்போட்டிக்குத் தேர்வு செய்யப்படுவர்; இறுதிப்போட்டி 2023-ம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. தேசிய அளவிலான இறுதிப்போட்டியில் வெற்றி பெறுபவருக்கு ரூ. 2.5 லட்சம்* ரொக்கப்பரிசுடன் பெருமைமிக்க டாடா க்ரூசிபிள் ட்ராபியும் வழங்கப்படும். டாடா ப்ளே பிஞ்ச். டாடா மோட்டார்ஸ் நெக்ஸான், டாடா 1எம்ஜி, தனிஷ்க்கின் மியா, டாடா க்ளிக் ஆகியன இந்த குவிஸுக்கான பிராண்ட் பார்ட்னர்களாக உள்ளன. அனைத்து இறுதிப்போட்டிகளும் குறிப்பிட்ட நேரத்தில் டாடா க்ரூசிபிள் ஃபேஸ்புக். ட்விட்டர் பக்கங்களில், யூடியூப் சேனல்களில் காண ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. புகழ் பெற்ற குவிஸ் மாஸ்டர் ‘பிக்ப்ரெய்ன்’ கிரி பாலசுப்பிரமணியம் ( நி வீ கூ஁ வீ ஙிணீற்ணீ௨ஞூதீகூ஁ணீனீ ணீ ஸீ வீ ணீ னீ ) தனக்கேயுரிய தனித்துவமான ஸ்டைலில், ராஷ்மி பர்டாடோ ( ஸி ணீ உ லீ னீ வீ திஞூகூ஁மீணீபீஷ஁) உடன் இணைந்து இந்நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கி வருகிறார். *பரிசுத்தொகை வரிவிலக்குக்கு உட்பட்டது

டாடா க்ரூசிபிள் கேம்பஸ் குவிஸ் போட்டி விவரங்கள் www.tatacrucible.com தளத்தில் கிடைக்கும்

# ஒரு சவரன் தங்கத்தின் விலை ரூ.41 ஆயிரத்தை தாண்டியது





சென்னை, டிசம்பர் 31, 2022: சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.120 உயர்ந்து ஒரு சவரன் ரூ.41,040 ஆக விற்பனை செய்யப்படுகிறது.

தங்கம் விலை அவ்வப்போது ஏற்ற இறக்கம் கண்டு வருவது தொடர்ந்து நிகழ்ந்து வரும் ஒன்றாக இருந்தாலும், கடந்த சில வாரங்களாக தங்கத்தின் விலை ஏற்றம் கண்டு வருகிறது. கடந்த வாரத்தில் அதிகபட்சமாக டிசம்பர் 12 ந் தேதி ஒரு சவரன் தங்கம் ரூ.40,360-க்கும், டிசம்பர் 14 ந் தேதி ஒரு சவரன் ரூ.40,800 ஆகவும் விற்பனை செய்யப்பட்டது. பின்னர், 16 ந் தேதி ஒரு சவரன் ரூ.40,360 ஆக குறைந்து விற்பனை செய்யப்பட்டது. பிறகு கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக தங்கத்தின் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், இந்த ஆண்டின் கடைசி நாளான இன்று, சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.15 உயர்ந்து ஒரு கிராம் தங்கம் ரூ.5,130 ஆக விற்பனை செய்யப்படுகிறது. இதன்மூலம் சவரனுக்கு ரூ.120 உயர்ந்து ஒரு சவரன் ரூ.41,040 ஆக விற்பனை செய்யப்படுகிறது.

அதேசமயம், வெள்ளியின் விலை கிராமுக்கு ரூ.20 காசுகள் குறைந்து ரூ.74.30 ஆகவும், ஒரு கிலோவுக்கு ரூ.200 குறைந்து ரூ.74,300 ஆக விற்பனை செய்யப்படுகிறது. தங்கத்தின் விலை ரூ.41 ஆயிரத்தை கடந்துள்ளது தங்கம் வாங்குவோர் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# புதிய நாடாளுமன்ற கட்டிடம் மார்ச் மாதம் திறப்பு



சென்னை, டிசம்பர் 31, 2022: புதிய நாடாளுமன்ற கட்டிடம், மார்ச் மாதம் திறக்கப்படுகிறது. பட்ஜெட் கூட்டத்தொடரின் 2வது பகுதி, அந்த கட்டிடத்தில் நடக்கிறது.

தற்போதைய நாடாளுமன்ற கட்டிடம், 100 ஆண்டுகள் பழமையானது. எனவே, புதிய நாடாளுமன்ற கட்டிடம் கட்ட மத்திய அரசு முடிவு செய்தது.

ராஜபாதை சீரமைப்பு மற்றும் துணை ஜனாதிபதி இல்லம், பிரதமர் இல்லம், மத்திய செயலகம் ஆகிய புதிய கட்டுமானங்கள் அடங்கிய சென்டிரல் விஸ்டா திட்டத்தின் ஒரு அங்கமாக புதிய நாடாளுமன்றம் கட்டப்படுகிறது.

இதற்கு கடந்த 2020ம் ஆண்டு டிசம்பர் மாதம் பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். சமீபத்தில் முடிவடைந்த குளிர்கால கூட்டத்தொடர், புதிய நாடாளுமன்ற கட்டிடத்தில் நடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், பணியில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, புதிய கட்டிடம் தயாராகவில்லை. இருப்பினும், மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரத்துறை அமைச்சர் ஹர்தீப்சிங் பூரி அவ்வப்போது நேரில் பார்வையிட்டு வருகிறார். கட்டுமான பணி அதிக வேகத்தில் நடந்து வருவதாக அவர் கூறியிருந்தார்.

இந்தநிலையில், புதிய நாடாளுமன்ற கட்டிடம், மார்ச் மாதம் திறக்கப்படும் என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுகுறித்து அந்த வட்டாரங்கள் கூறியதாவது:-

கட்டுமான பணி முழு வேகத்தில் நடந்து வருகிறது. பிப்ரவரி மாதத்துக்குள் முடிவடைந்து விடும். மார்ச் மாதம் திறந்து வைக்கப்படும். பட்ஜெட் கூட்டத்தொடரின் 2வது பகுதி, புதிய கட்டிடத்தில் நடக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

புதிய கட்டிடத்தில், இந்தியாவின் ஜனநாயக பெருமையை பறைசாற்றும் பிரமாண்டமான அரசியல் சட்ட மண்டபம், எம்.பி.க்கள் ஓய்வு எடுக்கும் அறை, நூலகம், நிலைக்குழுக்களுக்கான அறைகள், உணவு அருந்தும் பகுதி, விசாலமான வாகன நிறுத்தும் பகுதி ஆகியவை இடம்பெற்று இருக்கும்.

இவ்வாறு மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

பொதுவாக, பட்ஜெட் கூட்டத்தொடர் 2 பகுதிகளாக நடக்கும். முதல் பகுதி, ஜனவரி 30 அல்லது 31ந் தேதி, ஜனாதிபதி உரையுடன் தொடங்கும். பிப்ரவரி 1ந் தேதி பட்ஜெட் தாக்கல் செய்யப்படும். பிப்ரவரி 8 அல்லது 9ந் தேதியுடன் முதல் பகுதி நிறைவடையும்.

மார்ச் மாதம் இரண்டாவது வாரம், பட்ஜெட் தொடரின் 2வது பகுதி தொடங்கி, மே மாதம் முதல் வாரம்வரை நடக்கும்.

அந்த 2-வது பகுதிதான், புதிய நாடாளுமன்ற கட்டிடத்தில் நடக்கும் என்று தெரிகிறது.

## சாய் சில்க்ஸ் (கலாமந்திர்) அதன் 52 வது அங்காடி மற்றும் நான்காவது முதன்மையான காஞ்சிபுரம் வரமஹாலக்ஷ்மி சில்க்ஸ் வடிவமைப்பு கடையை பிரபல நடிகையான ஜான்வி கபூர் திறந்து வைத்தார்.

சென்னை, டிசம்பர் 31, 2022: 2019, 2020 மற்றும் 2021 நிதியாண்டில் வருமானம் மற்றும் வரிக்குப் பிந்தைய லாபத்தின் அடிப்படையில் தென்னிந்தியாவில் கலாச்சார ஆடைகளின், குறிப்பாக புடவைகளின் முன்னணி சில்லறை விற்பனையாளர்களில் ஒன்றான (டெக்னோபக்ரிப்போர்ட் படி) சாய் சில்க்ஸ் (கலாமந்திர்) லிமிடெட் (சாய் சில்க்ஸ் அல்லது எஸ் எஸ் கே எல்), தனது 52வது கடையை தமிழ்நாட்டில் சென்னையில் தொடங்கியது.



"காஞ்சிபுரம் வர மஹாலக்ஷ்மி சில்க்ஸ்" என்ற பெயரில் இயங்கும் புதிய எஸ் எஸ் கே எல் ஸ்டோர் ஆனது, மூன்று தளங்கள் முழுவதும் 12000 சதுர அடிக்கு மேல் பரப்பளவைக் கொண்டு, சென்னை தி.நகரில் உள்ள பாண்டி பஜாரில் அமைந்துள்ளது

வர மஹாலக்ஷ்மி ஸ்டோர் தமிழ்நாட்டின் நான்காவது கடையாகும். மற்றவை சென்னை மயிலாப்பூர், காஞ்சிபுரம் காந்தி சாலை, மற்றும் சென்னை அண்ணா நகரில் அமைந்துள்ளன. பனாரசி, படோலா, கோட்டா, காஞ்சிபுரம், பைத்தானி, ஆர்கன்சா, குப்படம் போன்ற பல்வேறு வகையான புடவைகள் உட்பட பிரீமியம் தயாரிப்புகள் மற்றும் காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள் போன்ற கைத்தறிகளில் கவனம் செலுத்தி இந்த ஸ்டோர் வழங்குகிறது.

மதிப்புமிக்க பேஷன் பொருட்கள் உட்பட பல வகையான அல்ட்ரா-பிரீமியம் மற்றும் பிரீமியம் புடவைகள் மற்றும் கலாச்சார உடைகள் உள்ளிட்ட பல்வேறு வகையான தயாரிப்புகளை வழங்குவதன் மூலம் எஸ் எஸ் கே எல் இன் ஸ்டோர்கள், இந்தியாவின் துடிப்பான கலாச்சாரம், பழக்கவழக்கங்கள் மற்றும் பாரம்பரியத்தை பரப்புவதில் கவனம் செலுத்துகின்றன. இந்த உயர்தர கலாச்சார பட்டுப் புடவைகள் மற்றும் கைத்தறிகள், மற்றவற்றுடன், திருமணம் மற்றும் நிகழ்வுகளில் அணியும் உடைகளை நோக்கமாகக் கொண்டுள்ளன. வர மஹாலக்ஷ்மி புடவைகள் தோராயமாக ரூ. 4,000 முதல் ரூ.2,50,000 வரை சில்லறை விற்பனையில் விற்கப்படுகின்றன.

சாய் சில்க்ஸின் (கலாமந்திர்) நிர்வாக இயக்குனர் திரு.நாககனக துர்கா பிரசாத் சாலவடி கூறுகையில், "வாழ்க்கையின் அனைத்து மகத்தான தருணங்களையும் பாணியாகக் கொண்டாடுவதில் நாங்கள் நம்புவதால், அல்ட்ரா-பிரீமியம் மற்றும் பிரீமியம் புடவைகளை உள்ளடக்கிய எங்களது பல்வேறு வழங்கல்களுடன், சாய் சில்க்ஸ், ஒரு கலாச்சார நாகரீக நிறுவனமாக தொடர்ந்து அங்கீகரிக்கப்பட்டு வருகிறது. எங்களின் நான்காவது காஞ்சிபுரம் வர மஹாலக்ஷ்மி சில்க்ஸ் ஸ்டோர் தமிழ்நாட்டில் இருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், மேலும் இது எங்கள் வாடிக்கையாளர்களுக்கு அதிக மதிப்புமிக்க அனுபவத்தை வழங்குவதற்கான எங்கள் வலிமையைக் காட்டுகிறது. இந்த புதிய ஸ்டோர் எங்களின் முழு வகையிலான பிரீமியம் பட்டுப் புடவைகள் மற்றும் காஞ்சிபுரம் புடவைகளை வழங்குகிறது." என்று கூறினார்.

திரு. சாலவாடி மேலும், "எங்கள் முயற்சியானது, அதே நகரத்தில் ஸ்டோர்களையும் சரக்குகளையும் திறம்பட நிர்வகிப்பதற்கும், வாடிக்கையாளர்களின் வாங்கும் சக்தியை திரள் அடிப்படையிலான உத்தியுடன் மேம்படுத்துவது ஆகும். காஞ்சிபுரம் வர மஹாலக்ஷ்மி சில்க்ஸ் ஸ்டோர்ஸ், ஒரு தனித்துவமான அனுபவத்தையும் வாடிக்கையாளர் சேவையையும் வழங்குகிறது, இது எங்கள் சரக்கு மற்றும் நாங்கள் வழங்கும் பல்வேறு எஸ் கே யுகளுடன் இணைந்து, வளர்ந்து வரும் வாடிக்கையாளர்கள் ஈர்க்கவும் தக்கவைக்கவும் எங்களுக்கு உதவுகிறது. அடுத்த இரண்டு ஆண்டுகளில், தென்னிந்தியா முழுவதும் எங்களின் நான்கு வடிவங்களிலும் மேலும் 25 ஸ்டோர்களைத் திறப்பது எங்களின் நோக்கமாகும்." என்று கூறினார்.

பிரபல நடிகையான ஜான்வி கபூரை சாய் சில்க்ஸ் ஸ்டோரை திறந்து வைக்க தேர்வு செய்துள்ளது. இதுகுறித்து நடிகை ஜான்வி கபூர் கூறுகையில், "சாய் சில்க்ஸின் நான்காவது காஞ்சிபுரம் வர மஹாலக்ஷ்மி ஸ்டோரை சென்னையில் தொடங்குவது மிகவும் உற்சாகமாக இருக்கிறது. சாய் சில்க்ஸின் நிபுணத்துவம் மற்றும் அதிநவீன வடிவமைப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதும், பாணியாக வெளியே சென்று வாழ்க்கையின் பொன்னான தருணங்களை அனுபவிக்க உத்வேகத்தை அளிக்கிறது. தரம், வாடிக்கையாளர் சேவை, தயாரிப்பு வகை ஆகியவற்றில் நிறுவனத்தின் செயல்பாட்டு மையம், தனித்துவமானது மேலும் அதன் பிராண்ட் அங்கீகாரத்தை பலப்படுத்துகிறது மற்றும் வாடிக்கையாளர் விசுவாசத்தை மேம்படுத்துகிறது." என்று கூறினார்.

2011 இல் பெங்களூருவில் உள்ள சிக்பேட்டில் முதல் ஸ்டோரை நிறுவியதன் மூலம், வர மஹாலக்ஷ்மி ரீடெய்ல் பிராண்ட் மாடல் நிறுவப்பட்டது. மே 31, 2022 நிலவரப்படி, இது பெங்களூரு, ஹைதராபாத், சென்னை, விஜயவாடா, நெல்லூர் மற்றும் பிற நகரங்களை உள்ளடக்கியதாக விரிவடைந்துள்ளது.

வர மஹாலக்ஷ்மி ஸ்டோர்கள் மிகவும் வழக்கமான பாணியில் அலங்கரிக்கப்பட்டுள்ளன மற்றும் காஞ்சிபுரம் கலாச்சாரத்தில் பிராண்டின் தாக்கத்தை பிரதிபலிக்கின்றன. இது கைத்தறி புடவைத் தொழிலை நவீனமயமாக்கும் ஒரு பிராண்டாக உருவாக்கப்பட்டது மேலும் காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள் மற்றும் பிற கைத்தறி மற்றும் சந்தர்ப்பத்துக்கான புடவைகளை ஒரே இடத்தின் கீழ் வழங்குகிறது.

சாய் சில்க்ஸ், கலாமந்திர், காஞ்சிபுரம் வர மகாலட்சுமி சில்க்ஸ், மந்திர் மற்றும் கேஎல்எம் ஃபேஷன் மால் உட்பட நான்கு வகையான ஸ்டோர் வடிவங்களைக் கொண்டுள்ளது, இதில் உயர் கலாச்சார நாகரீகம், நடுத்தர வருமான வர்க்கத்திற்கான கலாச்சார நாகரீகம் மற்றும் மதிப்பு-பேஷன் உள்ளிட்ட பல்வேறு தயாரிப்புகளை வெவ்வேறு விலைப் புள்ளிகளில், சந்தையின் பல்வேறு பிரிவுகளில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது.

## தமிழக மருத்துவர் அருண்குமாரின் சேவையை பாராட்டிய உத்தரக்கண்ட் முதல்வர்

சென்னை, டிசம்பர் 31 2022: புண்ணிய பூமி ஆன உத்தராகாண்டில் ஆன்மீக ஸ்தலங்களுக்கு செல்லும் பக்தர்களுக்கு முதலுதவி மற்றும் மருத்துவ சேவையாற்றி வரும் சிக்ஸ் சிக்மா ஹெல்த் கேர் அமைப்பினரை உத்தராகாண்ட் முதல்வர் கௌரவித்தார்.



உத்தராகாண்ட் மாநிலத்தில் புகழ்பெற்ற பத்ரிநாத் கேதார்நாத் போன்ற புகழ்பெற்ற மலைக் கோயில்கள் உள்ளன ஆண்டுதோறும் பல லட்சக்கணக்கான பக்தர்கள் வந்து செல்வது வழக்கம் அவ்வாறு வந்து செல்லும் பக்தர்களின் மருத்துவ பாதுகாப்பை உறுதி செய்யும் விதத்தில் அவர்களுக்கு தேவையான மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த உதவிகளை சிக்ஸ் சிக்மா ஹெல்த் கேர் என்ற தன்னார்வ அமைப்பு சிறப்பாக கடந்த சில ஆண்டுகளாக செயலாற்றி வருகிறது .

அவர்களை அனைவரும் கௌரவிக்கும் விதமாக அவர்களின் சேவையை பாராட்டு விதமாகவும் உத்தராகாண்ட் முதல்வர் மாண்புமிகு புஷ்கர் சிங் டாமி அவர்கள் தன்னுடைய இல்லம் அழைத்து பாராட்டி மகிழ்ந்தார்.

இந்த நிகழ்வின்போது பேசிய மாண்புமிகு முதலமைச்சர் புஷ்கர் சிங் கூறியதாவது, மிகப்பெரிய நீண்ட நெடிய பாரம்பரியத்தை கொண்டது உத்தராகாண்ட் மாநிலம். ஆண்டுதோறும் உலகம் அனைத்திலும் இருந்து பல கோடி மக்கள் ஆன்மீக சுற்றுலா வந்து செல்கிறார்கள் . 1200 அடிக்கு மேல் அமைந்திருக்கும் கோயில்களுக்கு மைனஸ் எட்டு டிகிரி வெப்ப நிலையில் மருத்துவ உதவி ஆற்றி வரும் சிக்ஸ் சிக்மாவின் செயல்பாடுகள் வியப்புக்குள் ஆழ்த்துகிறது எனவும் சிக்ஸ் சிக்மா ஹெல்த் கேர்க்கு வளமான எதிர்காலம் காத்திருப்பதாகவும் மேலும் எல்லா நிலையிலும் உத்தராகாண்ட் மாநில அரசு சிக் சிக்மா ஹெல்த் கேர் உடன் இருக்கும் என்றும் உறுதியளித்தார்.

மேலும் இந்த நிகழ்வின்போது சிறப்பாக சேவையாற்றிய தமிழகத்தை சார்ந்த மருத்துவர் அருண்குமார் உள்பட சிக் சிக்மா ஹெல்த் கேர் அமைப்பினர்கள் அனைவரும் கௌரவிக்கப்பட்டனர்.

அப்போது சிக்சிமா ஹெல்த் கேர் தலைவர் மருத்துவர் பிரதீப் பர்டுவாஜ் பேசும்போது மௌண்டைன் மெடிக்கல் இன்ஸ்டிட்யூட்டை அமைப்பது குறித்தும் , மருத்துவ சேவைகளை சபரிமலை போன்ற மலைக் கோயில்களுக்கு விரிவு படுத்துவது குறித்தும் பேசினார் நிகழ்வின்போது

இயக்குனர் மருத்துவர் அனிட்டா பர்டுவாஜ் உள்பட மேலும் பலர் உடன் இருந்தனர்.

## இந்தியாவின் 2022 இ-காமர்ஸ் போக்குகளை செயல்படுத்தும் மீஷோவில், தமிழ்நாட்டிலிருந்து, 146க்கும் மேற்பட்ட கோடீஸ்வர விற்பனையாளர்களும் ~2,600 இலட்சாதிபதி விற்பனையாளர்களும் உள்ளனர்

சென்னை, டிசம்பர் 31, 2022: அனைவருக்கும் இணைய வர்த்தகத்தை சமத்துவப்படுத்துவதற்கான எங்கள் நோக்கத்தில் நாங்கள் பல புதிய முன்னேற்றங்களை எட்டியுள்ளதால், இந்தியாவின் ஒரே உண்மையான இ-காமர்ஸ் சந்தையான மீஷோ 2022 ஆம் ஆண்டை ஒரு வெற்றிகரமான ஆண்டாக கொண்டிருந்தது. இந்த ஆண்டு, நாங்கள், நாட்டின் அனைத்து மூலைகளிலிருந்தும் மதிப்பு தேடும் மற்றும் எங்கள் அன்றாட குறைந்த விலைகள் மற்றும் பரந்த வகைப்படுத்தலைத் தேர்வு செய்யும் நுகர்வோருடன், ஒவ்வொன்றும் அதற்கு முந்தையதை விட அதிகமாக உள்ள மூன்று விற்பனை சாதனைகளை படைத்துள்ளோம்,

பூஜ்ஜிய கமிஷன் மற்றும் பூஜ்ஜிய அபராதம் போன்ற நிறுவனத்தின் தொழில்-முதல் முயற்சிகளின் விளைவாக, கடந்த ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து அதிக எண்ணிக்கையிலான குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மீஷோவில் சேர்ந்துள்ளனர். தமிழ்நாட்டில் இருந்து, கடந்த 12 மாதங்களில், 146க்கும் மேற்பட்ட விற்பனையாளர்கள் கோடீஸ்வரர்களாகவும், ~2,600 விற்பனையாளர்கள் இலட்சாதிபதிகளாகவும் ஆகியுள்ளார்கள். கூடுதலாக, இந்த ஆண்டு மாநில அடிப்படையிலான வழங்குநர்கள் எண்ணிக்கையில் 81% அதிகரிப்பு உள்ளது, அதில் 60% பேர் மீஷோவுடன் தங்கள் இ-காமர்ஸ் பயணத்தைத் தொடங்கினர். தமிழ்நாட்டின் நுகர்வோர் மத்தியில் மிகவும் விரும்பப்படும் பிரபலமான பொருட்கள் ப்ளூடூத் ஹெட்ஃபோன்கள் & இயர்போன்கள், நகைப் பெட்டிகள், குர்திக்கள் மற்றும் டிஜிட்டல் வாட்ச்கள் ஆகியவையாகும்.

அனைத்து மக்கள்தொகை மற்றும் சமூகப் பொருளாதார நிலைகளிலும் இ-காமர்ஸ் பிரபலமடைந்து வருவதால், நாட்டின் பன்முகத்தன்மை கொண்ட வாடிக்கையாளர் தளத்திற்கான அணுகல் மற்றும் மலிவு விலையை மீஷோ தொடர்ந்து அதிகரித்து வருகிறது. 2022ல் இந்தியா எப்படி ஷாப்பிங் செய்தது என்பதைக் காட்டும் சில முக்கிய சிறப்பம்சங்கள் கீழே உள்ளன.

எங்கள் விற்பனையாளர்கள் ஒரு வெற்றிக் கதையை உருவாக்குகிறார்கள்

• எங்கள் தொழில்துறையின் முதல் பூஜ்ஜிய கட்டண உத்தியின் ஆதரவினால் எங்கள் விற்பனையாளர்கள் 2022ல் 3,700 கோடிகள் கமிஷனை சேமித்துள்ளனர் .

• இந்தியாவில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை டிஜிட்டல் மயமாக்குதல் ஆனது, 2022 இல், மீஷோவிற்கு 500,000 வழங்குநர்களை பதிவு செய்தது. அவர்களில் 61% பேர் இ-காமர்ஸுக்கு புதியவர்கள் மேலும் அவர்கள் முதல் முறை ஆன்லைன் விற்பனையை மேற்கொண்டனர்.

இந்தியாவில் ஷாப்பிங் செய்வதற்கான முக்கிய நேரம்

• ஞாயிற்றுக்கிழமைகள் ஓய்வெடுப்பதற்கானவையாக இருந்தன மேலும் 2022 ஆம் ஆண்டில் இந்தியர்கள் ஆன்லைன் ஷாப்பிங்கில் அதிகம் ஈடுபட்ட நாள் அந்த நாளாய் இருந்தது, கடந்த ஆண்டு அந்த நாள் புதன்கிழமை ஆக இருந்தது.

• மீஷோவில் ஷாப்பிங் செய்வதற்கான பரபரப்பான நேரமானது, 2021 ஆம் ஆண்டு மதியம் 2-3 மணியாக இருந்தது மாறி, ஒவ்வொரு நாளும் இரவு 8 மணியாக இருந்தது.

• மீஷோ வாடிக்கையாளர்களுக்கு, தினமும் இரவு 8 மணி முக்கிய ஷாப்பிங் நேரம் ஆகும், இது 2021 இல் மதியம் 2-3 மணி வரை அதிக பரிவர்த்தனையைக் கண்டதாக இருந்தது

• "பிபால்கேப்ட்", "பர்கட்கேப்ட்", "அட்டாச்சக்கிகேபீச்சே" மற்றும் "தண்ணீர் தொட்டிக்கு அருகில்" போன்ற உள்ளூர் அடையாளங்கள் நேரடி டெலிவரி ஊழியர்களுக்கு வழிகாட்டுவதற்காக மில்லியன் கணக்கான நுகர்வோரால் பயன்படுத்தப்பட்டன. டிஜிட்டல் மேப்களை தவிர்த்து, இந்தியன் வழிசெலுத்தல் கருவியின் துல்லியத்துடன் போட்டியிட முடியாது.

இந்தியா தன்னை சிறப்பாக கவனித்துக் கொள்கிறது

• 2022 ஆம் ஆண்டில் அதிகம் தேடப்பட்ட இரண்டாவது பொருள் "ஸ்மார்ட்வாட்ச்" ஆகும், இது இந்தியர்கள் தங்கள் உடல் செயல்பாட்டை எவ்வாறு கணிசமாக மாற்றுகிறார்கள் என்பதை நிரூபிக்கிறது.

• 60% க்கும் அதிகமான ஆர்டர்கள் அடுக்கு 4 சந்தைகளில் இருந்து வருவதால், ஆண்கள் சீர்ப்படுத்தும் பொருட்களை வாங்குவதற்கு முன்பை விட அதிகமாக உள்ளனர்.

• அடுக்கு 2+ நகரங்களில் சானிட்டரி நாப்கின்களுக்கான ஆர்டர்கள் 9 மடங்கு அதிகரித்துள்ளன, இது இந்தியாவில் மில்லியன் கணக்கான பெண்களை இ-காமர்ஸ் எவ்வாறு அணுகக்கூடியதாக ஆக்குகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

2022 ஷாப்பிங் கார்ட்

• ஒவ்வொரு நிமிடமும் 148 புடவைகள் விற்பனை செய்யப்பட்டு, நாட்டின் அனைத்து மூலைகளிலிருந்தும் தேவை வருவதால், இந்தியாவின் ஆடை மீதான மோகம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

ஒவ்வொரு நாளும் 93,000 டி-சர்ட்டுகள், 51,725 ப்ளூடூத் இயர்போன்கள் மற்றும் 21,662 லிப்ஸ்டிக்குகள் விற்கப்பட்டன.

## சென்னை 2022 இல் ஸ்விக்கியைப் பயன்படுத்தியது எப்படி எ2பி யின் வணிகம் செய்யும் முறையை மாற்றிய ஸ்விக்கி

சென்னை, டிசம்பர் 31, 2022: சென்னையில் இந்த ஆண்டு ஆயிரக்கணக்கான புதிய பயனர்களின் வரவேற்பினைப் பெற்று, ஸ்விக்கி அதன் பிரபலத்தன்மையை தொடர்ந்து அதிகரித்துள்ளது.

சென்னை மற்றும் தமிழக மக்கள் ஸ்விக்கி உணவு சந்தையில் மிகவும் விரும்பியவை -

● சென்னையிலும், தமிழகம் முழுவதிலும் அதிகம் ஆர்டர் செய்யப்பட்ட பொருள் சிக்கன் பிரியாணிதான்

● சமோசா நம்பர் 1 சிற்றுண்டியாகவும் அதைத் தொடர்ந்து நெய் பொங்கலும் பாவ் பாஜியும் தமிழ்நாடு முழுவதும் ஆர்டர் செய்யப்பட்டுள்ளன

● கேசர் ரசமலாய் தமிழ்நாட்டில் அதிகம் ஆர்டர் செய்யப்பட்ட இனிப்பு வகையாகும்

சென்னை மக்கள் ஸ்விக்கி இன்ஸ்டாமார்ட்டில் ஷாப்பிங் செய்வதில் மிகவும் விரும்பிய அம்சம் - வேமாக வணிக அனுபவம்

● ஆயிரக்கணக்கான புதிய வாடிக்கையாளர்கள் இன்ஸ்டாமார்ட்டில் தங்களின் கடைசி நிமிடத் தேவைகள் மற்றும் மளிகை தேவைகளுக்காக ஆர்டர் செய்தனர்

● பழங்கள் மற்றும் காய்கறிகள், பேன்ட்ரி ஸ்டேபிள்ஸ், இன்டல்ஜன்ஸ் மற்றும் தனிப்பட்ட பராமரிப்பு ஆகியவை வாடிக்கையாளர்களின் விருப்பத்தைக் கைப்பற்றிய முதன்மையான வகைகளாகும். எங்களது வாடிக்கையாளர்களுக்கு..... ..மனமார்ந்த நன்றிகள்

ஒவ்வொன்றும் முக்கியம், ஒவ்வொரு ஆர்டரும் எங்கள் வளர்ச்சிக்குக் காரணம். இந்திய உணவுகள் மற்றும் உள்ளூர் உணவு வகைகளுக்கு ஆண்டு முழுவதும் தேவை இருந்தது, நகரத்தின் உணவுப் பிரியர் ஒருவர் உச்சபட்சமாக ரூ.27,378 தொகைக்கு ஒற்றை ஆர்டரை வழங்கியுள்ளார்.

டெலிவரி எக்சிக்யூட்டிவ்கள்

எங்கள் டெலிவரி எக்ஸிகியூட்டிவ் வெங்கடேசன் சென்னை முழுவதும் அதிக எண்ணிக்கையிலான ஆர்டர்களை டெலிவரி செய்தார்

ஸ்விக்கியில் உணவக கூட்டாளர்கள்

2022 ஆம் ஆண்டில் ஸ்விக்கியில் 5,858 புதிய உணவகங்கள் சென்னை மாநகரில் பட்டியலிடப்பட்டுள்ளன. ஸ்விக்கி உடனான கூட்டாண்மை, தமிழகம் முழுவதும் உள்ள 50,000 உணவகங்கள் மற்றும் உணவு நிறுவனங்கள் தங்கள் வணிகத்தை மேம்படுத்த உதவியுள்ளது. ஸ்விக்கி நிறுவனம் சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் செயல்படுகிறது.

சென்னையைச் சேர்ந்த எ2பி (அடையார் ஆனந்த பவன்) நிறுவனம் "எ2பியில் நாங்கள் வணிகம் செய்யும் முறையை ஸ்விக்கி மாற்றியுள்ளது. ஸ்விக்கி உடன் இணைந்த பிறகு நாங்கள் மிகப்பெரிய வளர்ச்சியையும் லாபத்தில் அதிகரிப்பையும் கண்டுள்ளோம். ஸ்விக்கியில் பட்டியலிடப்பட்டதன் மூலம் தமிழ்நாடு முழுவதும் அதிகமான வாடிக்கையாளர்களையும் பயனர்களையும் நாங்கள் அடைந்துள்ளோம். புதிய ஆண்டை நெருங்கும் நேரத்தில், ஸ்விக்கியுடன் தொடர்ந்து கூட்டுறவை எதிர்பார்க்கிறோம்." என்று கூறியது.

ஹலோ மெட்ராஸ்
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

சனிக்கிழமை,
டிசம்பர் 31, 2022

# செம்பியாக நடித்திருக்கும் சிறுமி நிலா, நேர்த்தியான நடிப்பு பழங்குடியின மக்களில் ஒருவராகவே மாறிய கோவை சரளா சிறுமிகள் மீதான பாலியல் வன்கொடுமையை மிக அழுத்தமாக இயக்கியிருக்கும் பிரபு சாலமனின் செம்பி மிக அருமை



சென்னை, டிசம்பர் 31, 2022: கொடைக்கானலின் புலியூரைச் சேர்ந்த பழங்குடியின பெண் வீரத்தாயி (கோவை சரளா). தன் 10 வயது பேத்தி செம்பியுடன் (நிலா) வாழ்ந்து வருகிறார். காட்டுப்பகுதியில் கிடைக்கும் மலைத்தேன், கிழங்குகளை விற்று தன் அன்றாட வாழ்க்கையை நடத்தி வரும் வீரத்தாயின் பேத்தி செம்பி கொடைக்கானலை சுற்றிப் பார்க்க வந்த 3 இளைஞர்களால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்படுகிறார். உடைந்து போகும் வீரத்தாயி குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தர போராடுகிறார். அந்தப் போராட்டத்தில் அவருக்கு நியாயம் கிடைத்ததா? இல்லையா? குற்றவாளிகள் யார் யார்? இதுதான் படத்தின் திரைக்கதை.

தன்னுடைய முகத்தோற்றத்தை மாற்றி, சுருக்கம் உள்ளிட்ட நுணுக்கங்களுடன் பழங்குடியின மக்களில் ஒருவராக திரையில் தோன்றுகிறார் கோவை சரளா. இதுவரை நடித்ததிலேயே முற்றிலும் மாறுபட்ட கதாபாத்திரத்தில் அனுபவம் வாய்ந்த தனது நடிப்பின் மூலம் ஒட்டுமொத்த திரையையும் ஆக்கிரமித்து மிரட்டுகிறார். ஓரிடத்தில் அவர் உடைந்து அழும் காட்சியில் கலங்கச் செய்து முத்திரைப் பதிக்கிறார்.

செம்பியாக நடித்திருக்கும் சிறுமி நிலா, நேர்த்தியான நடிப்பால் கதாபாத்திரத்திற்கு உயிர்கொடுக்கிறார். குறிப்பாக குற்றவாளிகளைக் கண்டு நடுங்கும் காட்சியும், க்ளைமாக்ஸின் நடிப்பும் திரைத் துறையில் அவருக்கான எதிர்கால இடத்தை உறுதி செய்கிறது. அஸ்வின் தனக்கான கதாபாத்திரத்திற்கு நியாயம் சேர்க்கும் நடிப்பை பதிவு செய்கிறார். இவர்களுடன் தம்பி ராமையா, நாஞ்சில் சம்பத், பழ.கருப்பையா, ஞான சம்பந்தன் உள்ளிட்டோர் துணைக் கதாபாத்திரங்களுகளில் வலு சேர்க்கின்றனர்.

அடர்ந்த காடுகள், உயர்ந்த மலைகளை இருப்பிடமாக கொண்டு இயற்கையுடன் இயைந்து வாழும் வீரத்தாயின் உலகிற்குள் நம்மை கைபிடித்து அழைத்துச் செல்கிறார் இயக்குநர் பிரபு சாலமன். ஒளிப்பதிவாளர் எம்.ஜீவன் அங்கிருக்கும் காடுகளையும், மலைகளையும் ஜீவனாக்கி காட்சிகளை அதே தட்ப வெட்ப நிலையில் திரையரங்குகளுக்குள் கடத்தி குளிரை கண்களுக்கு மட்டுமல்லாமல், மனதிற்கும் கடத்துகிறார். பிரபு சாலமன் தன் தொழில்நுட்பக் குழுவுடன் இணைந்து காட்டும் உலகம் அலாதியானது. வீரத்தாயைத் தாங்கும் செம்பி... செம்பியைத் தாங்கும் வீரத்தாய்.

உறவுகளுக்கிடையே உறுத்தலில்லாமல் கட்டமைக்கும் உலகம் கதைக்குள் நுழையும் போது வேகமெடுக்கிறது. அந்த உலகில் நாமும் ஒருவராக இருப்பதால் 'செம்பி'யின் பாதிப்பு நம்மையும் ஆட்கொண்டு 'நீதி'யை கோர வைக்கிறது.

பாலியல் வன்கொடுமையை தேர்தலுக்காக பயன்படுத்தும் கட்சிகள், அதிகாரத்துக்கும் பணத்துக்கும் படியும் காவல் துறை, பொது சமூகத்தின் கண்ணோட்டம் என பல்வேறு விஷயங்களை பேசுகிறது படம்.

எங்கேஜிங்காக படத்தை நகர்த்த முயற்சித்திருக்கும் இயக்குநர், சென்டிமென்ட் காட்சிகளில் ஸ்கோர் செய்கிறார். கலங்க வைக்கும் சில காட்சிகளுக்கு நிவாஸ் கே.பிரசன்னாவின் பின்னணி இசை பக்கம் பலம். "உண்மையை புரிய வைக்க மொழி தேவையில்லை வலி போதும்" வசனம் கவனம் ஈர்க்கிறது. படத்தின் யதார்த்தத்தைக்கூட்டிய ஒப்பனையாளர் மற்றும் ஆடை வடிவமைப்பாளரின் பணி குறிப்பிடத்தக்கது.

மொத்தத்தில் சிறுமிகள் மீதான பாலியல் வன்கொடுமையை கையிலெடுத்து, அழுத்தமான வலியை கடத்த நினைத்திருக்கும் பிரபு சாலமனின் செம்பி மிக அருமை.

கோவை சரளா - வீரத்தாய், தம்பி ராமையா - அன்பு, அஷ்வின் குமார் லட்சுமிகாந்தன், நிலா - செம்பி, நாஞ்சில் சம்பத் - எழில் வேந்தன், பழ கருப்பையா - அதியமான், ஆகாஷ் - மாசிலாமணி, ஞானசம்பந்தன் - ஞானசம்பந்தன், ஆண்ட்ரூஸ் - ஒயிட் டாக், பாரதி கண்ணன் - பேராசிரியர். தயாரிப்பு - ட்ரிடென்ட் ஆர்ட்ஸ் ஆர். ரவீந்திரன் & ஏ. ஆர் என்டேர்டைன்மென்ட்ஸ் அஜ்மல் கான் & ரியா ரெட் ஜெயண்ட் வழங்கும் எழுத்து மற்றும் இயக்கம்: பிரபு சாலமன் ஒளிப்பதிவாளர்: எம். ஜீவன் படத்தொகுப்பாளர்: புவன் கலை இயக்குநர்: விஜய் தென்னரசு இசையமைப்பாளர்: நிவாஸ் கே. பிரசன்னா நடன இயக்குநர்: ஸ்ரீ கிருஷ் பாடலாசிரியர்கள் - எம்.கே . பாலாஜி, குட்டீ ரேவதி, பிரபு சாலமன் ஆடை வடிவமைப்பாளர்: பிரியா கரண் - பிரியா ஹாரி சண்டைப்பயிற்சி : பீனிக்ஸ் பிரபு ஒலிக்கலவை - ஜீ. தரணிபதி தயாரிப்பு நிர்வாகம் - ஹக்கிம் சுலைமான் விளம்பர வடிவமைப்பு : ஷபீர் மக்கள் தொடர்பு : நிகில் முருகன் ஸ்டில்ஸ் : பி. ரிஷால் ஈஸ்வர் ஆடைகள் : அ. கதிரவன் ஒப்பனை : சங்கர், எம்.கே ராஜு (கோவை சரளா ) டி ஐ : ரகுராமன் (ஸ்ரீ கலாசா ஸ்டுடியோ) வி எஃப் எக்ஸ் : டீநோட் ஸ்டுடியோ.

# "குலத்தொழில் ஒழிந்து விட்டது. . ஆனால் குலம் இன்னும் இருக்கிறதே" ; தமிழ்க்குடிமகன் இயக்குநர் வேதனை



சென்னை, டிசம்பர் 31, 2022: லட்சுமி கிரியேஷன்ஸ் தயாரிப்பில் உருவாகி வரும் படம் 'தமிழ்க்குடிமகன்'. இயக்குநர் சேரன் கதாநாயகனாக நடித்துள்ள இந்த படத்தை பெட்டிக்கடை, பகிரி ஆகிய படங்களை இயக்கிய இயக்குநர் இசக்கி கார்வண்ணன் இயக்கியுள்ளார்.

கதாநாயகியாக மிக மிக அவசரம் புகழ் ஸ்ரீபிரியங்கா நடித்துள்ளார். முக்கிய வேடங்களில் நடிகர்கள் லால், எஸ் ஏ சந்திரசேகர், வேல ராமமூர்த்தி, தீபிக்ஷா, அருள்தாஸ், ரவிமரியா மற்றும் பலர் நடித்துள்ளனர்.

இந்த படத்திற்கு விக்ரம் வேதா புகழ் சாம் சி.எஸ் இசையமைத்துள்ளார். ராஜேஷ் யாதவ் ஒளிப்பதிவை கவனிக்க, படத்தொகுப்பை கார்த்திக் மேற்கொள்கிறார்.

தமிழ்க்குடிமகன் திரைப்படத்தின் டீசர் சமீபத்தில் வெளியிடப்பட்ட நிலையில், 27 லட்சத்திற்கும் அதிகமான பார்வைகளை கடந்து பல்வேறு தரப்பினர் இடமிருந்து மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

இந்த படம் பற்றி இயக்குனர் இசக்கி கார்வண்ணன் கூறும்போது, "இந்த சமூகத்தில் சாதிய கட்டமைப்பை உடைப்பதற்காக தனி மனிதனாக போராடும் ஒருவனை பற்றிய கதைதான் இது. குலத்தொழில் முறையை இன்று ஒழித்து விட்டோம். ஆனால் அதை மையப்படுத்தி உருவான சாதியை இதுவரை ஏன் ஒழிக்க முடியவில்லை?

ஒவ்வொருவரும் அவர்கள் செய்த தொழிலின் அடிப்படையிலேயே தான் சாதி உருவானது. தொழில் 'சார்ந்து' உருவானதால் தான் அதற்கு சாதி என்ற பெயரே வந்தது. அதுகுறித்த புரிதல் இங்கே பலருக்கும் இல்லை. இப்போது பலரும் தாங்கள் செய்து வந்த தொழிலில் இருந்து வேறுவேறு தொழிலுக்கு மாறி விட்டனர். அதனால் அவர்களை இதற்குமுன் அவர்கள் செய்து வந்த தொழில் சார்ந்த சாதியை வைத்து அழைக்க வேண்டிய தேவை இல்லை.

அதற்கு பதிலாக சாதி என்கிற இடத்தில் தமிழ்க்குடிமகன் என குறிப்பிட வேண்டும். இப்படி செய்யும்போது குறிப்பிடத்தக்க இடைவெளியில் சாதியை முழுமையாக அழித்து விடலாம். சாதி என்கிற வார்த்தை என்னை அழுத்துகிறது, அதனால் சமூகத்துடன் ஒன்றி வாழ முடியவில்லை என்று பலரும் குமுறுகிறார்கள். அதற்கு ஒரு விடிவு தரும் விதமாக இந்த படத்தின் கதை அமைந்துள்ளது. குறிப்பாக உண்மை நிகழ்வுகளின் அடிப்படையில் இந்த படம் உருவாகி உள்ளது.

இந்த படத்தில் 6 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இந்த படத்தின் கதையாலும் பாடல்களாலும் ஈர்க்கப்பட்ட தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி, தனது வி ஹௌச் மியூசிக் சார்பாக இந்த படத்தின் பாடல் வெளியீட்டு உரிமையை மிகப்பெரிய தொகை கொடுத்து வாங்கியுள்ளார்.

இந்தப்படத்தில் கதாநாயகனாக நடித்த இயக்குநர் சேரனின் ஒத்துழைப்பு மிக அபரிமிதமானது. இந்த படத்தில் நடிக்கும்போது அவர் என்னிடம் இந்த சாதிய அமைப்பை உடைக்க முடியவில்லை. ஆனால் இந்தப்படம் அதை உடைக்கும் விதமாக இருக்கிறது என்று நெகிழ்ந்து போய் பாராட்டினார்.

இந்த படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து தற்போது போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் நடைபெற்று வருகின்றன. பிப்ரவரியில் படத்தை வெளியிடும் திட்டம் இருக்கிறது" என்கிறார் இசக்கி கார்வண்ணன்.

நடிகர்கள் ; சேரன், ஸ்ரீபிரியங்கா, லால், எஸ் ஏ சந்திரசேகர், வேல ராமமூர்த்தி, தீபிக்ஷா, அருள்தாஸ், ரவிமரியா மற்றும் பலர்.

தொழில்நுட்ப கலைஞர்கள் எழுத்து- இயக்கம்: இசக்கி கார்வண்ண இசை: சாம் சி.எஸ் ஒளிப்பதிவு: ராஜேஷ் யாதவ் படத்தொகுப்பு: கார்த்திக் கலை: வீரசமர் நடனம்: தினேஷ் சண்டை பயிற்சி: சக்தி சரவணன் மக்கள் தொடர்பு: நிகில் முருகன்

# முதல் முறையாக பான் இந்தியா இசையில் தடம் பதிக்கும் டி ஆர் 'வந்தே வந்தேமாதரம், வாழிய நமது பாரதம்' பாடல் மூலம் தமிழ் மற்றும் இந்தி இசை உலகில் முத்திரை பதிக்கிறார்



சென்னை, டிசம்பர் 31, 2022: தனது உற்சாக மற்றும் உள்ளம் உருக்கும் இசை மூலம் பல படங்களுக்கு பிளாட்டினம் டிஸ்க் வாங்கிய இயக்குநர், நடிகர், இசையமைப்பாளர், கவிஞர் என்று பன்முகத்தன்மை கொண்ட ஆளுமையான டி ராஜேந்தர் பான் இந்தியா இசையில் முதல் முறையாக ஒரு மியூசிக் ஆல்பம் வெளியிடுகிறார். இந்த தேச பக்தி ஆல்பத்தை தனது டி ஆர் ரெக்கார்டஸ் மூலம் தை மாதத்தில் வெளியிடவுள்ளார். இது குறித்து பேசிய அவர், "பிறக்கிறது ஆங்கில புத்தாண்டு 2023. புத்தாண்டு இது புத்துணர்வு தரும் ஆண்டாக, புதுமைமிக்க ஆண்டாக, பூரிப்பு தரும் ஆண்டாக, மக்களுக்கு மன மகிழ்ச்சி தரும் ஆண்டாக, மன அமைதி தரும் ஆண்டாக இருக்க எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்தனை செய்து எனது ஆங்கில புத்தாண்டு வாழ்த்துகளை அனைவருக்கும் தெரிவித்து கொள்கிறேன். புத்தாண்டு மலர்கின்ற இந்த தருணத்திலே எனது டி ஆர் ரெக்கார்ட்ஸ் என்ற ஆடியோ மற்றும் மியூசிக் வீடியோ மலர இருக்கின்றது என்கிற மகிழ்ச்சியான செய்தியை பகிர்ந்து கொள்கிறேன். ஒரு தலை ராகம், வசந்த அழைப்புகள், ரயில் பயணங்களில், ராகம் தேடும் பல்லவி, நெஞ்சில் ஒரு ராகம், உயிருள்ளவரை உஷா, தங்கைக்கோர் கீதம், உறவை காத்த கிளி, மைதிலி என்னை காதலி, ஒரு தாயின் சபதம், என் தங்கை கல்யாணி, சம்சார சங்கீதம், சாந்தி எனது சாந்தி, எங்கள் வீட்டு வேலன், பெற்றெடுத்த பிள்ளை, ஒரு வசந்த கீதம், தாய் தங்கை பாசம், மோனிஷா என் மோனாலிசா, சொன்னால் தான் காதலா, காதல் அழிவதில்லை, வீராசாமி... இப்படி என் படவரிசைகளில் எத்தனையோ பாடல்கள் இசையில் ரெக்கார்ட் பிரேக் பண்ணியிருக்கின்றன. கிளிஞ்சல்களுக்காக பிளாட்டினம் டிஸ்க் வாங்கினேன், பூக்களை பறிக்காதீர்கள், பூ பூவா பூத்திருக்கு, பூக்கள் விடும் தூது, கூலிக்காரன் இவை அனைத்தும் ரெக்கார்ட் பிரேக். இப்படி ரெக்கார்ட் பிரேக் செய்த நான், என்னுடைய கம்பெனிக்கு டி ஆர் ரெக்கார்ட்ஸ் என்கிற பெயர் வைத்துள்ளேன். நான் படத்திற்காக பாட்டெழுதியுள்ளேன், கழகத்திற்காக, கட்சிக்காக, ஏன் காதலுக்காக, பாசத்துக்காக கூட பாட்டெழுதியுள்ளேன். இப்பொழுது முதன் முதலாக இந்த பாரத தேசத்திற்காக ஒரு பாட்டு 'வந்தே வந்தேமாதரம், வாழிய நமது பாரதம்' என்கிற பாடலை அகில இந்திய கான்செப்டில் தமிழ் மற்றும் இந்தியில் உருவாக்கியுள்ளேன். தை திங்கள் பிறந்ததும் இதை வெளியிட இருக்கின்றேன்," என்று கூறியுள்ளார். மேலும், தனது புதிய முயற்சிக்கு நாடெங்கிலும் உள்ள மக்கள் தங்களது பேராதரவை வழங்குவார்கள் என்று டி ஆர் நம்பிக்கை தெரிவித்தார்.

# சந்தேஷ் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் வினு வெங்கடேஷ் இயக்கத்தில் பிரபுதேவா நடிக்கும் 'வுல்ஃப்' திரைப்படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளது



சென்னை, டிசம்பர் 31, 2022: வினோ வெங்கடேஷ் இயக்கத்தில் பிரபுதேவா, அனுசுயா பரத்வாஜ், ராய் லக்ஷ்மி, வசிஷ்ட சிம்ஹா, ஆர் ஜே ரமேஷ் மற்றும் அஞ்சு குரியன் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ள 'வுல்ஃப்' படத்தின் மூலம் கன்னட திரையுலகின் பிரபல தயாரிப்பு நிறுவனமான சந்தேஷ் புரொடக்ஷன்ஸ் தமிழ் திரையுலகில் அடியெடுத்து வைக்க உள்ளது.

எஸ் ஜே சூர்யாவின் உதவி இயக்குநராக பணியாற்றி சிண்ட்ரெல்லா திரைப்படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமாகி தற்போது வுல்ஃப் படத்தை இயக்கி வரும் வினு வெங்கடேஷ் கூறுகையில், "இப்படம் வரலாற்று காலத்திலிருந்து இன்றுவரை பயணிக்கும். அறிவியல் புனைக்கதை திரைப்படமான இதில், திகில் மற்றும் சஸ்பென்ஸ் நிறைந்த காட்சிகள் இடம் பெற்றிருக்கும். புதுச்சேரி, சென்னை, பெங்களூரு, அந்தமான் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் முக்கிய காட்சிகள் படமாக்கப்பட்டன. படப்பிடிப்பு முடிவடைந்து போஸ்ட் புரொடக்□ஷன் பணிகள் தற்போது முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. பிப்ரவரி இறுதியில் அல்லது மார்ச் மாத தொடக்கத்தில் படத்தை வெளியிட திட்டமிட்டுள்ளோம்," என்றார்.

படத்தின் தலைப்பைப் பற்றி பேசிய வினு, "படத்தின் வில்லன் மற்றும் கதாநாயகன் இருவரும் ஓநாயின் குணாதிசயங்களைக் கொண்டிருப்பார்கள். எந்த ஓநாய் வெற்றி பெறுகிறது என்பதுதான் கதையின் கரு" என்றார்.

என். சந்தேஷ் தயாரித்துள்ள இப்படத்தை மற்றும் சந்தேஷ் நாகராஜ் வழங்குகிறார். கர்நாடகாவின் சட்ட மேலவை உறுப்பினரும், தேசிய விருது பெற்ற தயாரிப்பாளருமான சந்தேஷ் நாகராஜ், சிவ ராஜ்குமார் மற்றும் புனித் ராஜ்குமார் போன்ற முன்னணி நட்சத்திரங்களின் திரைப்படங்கள் உட்பட 20க்கும் மேற்பட்ட கன்னட படங்களை தயாரித்துள்ளார்.

வுல்ஃப் படத்தின் இசையை அம்ரேஷ் கணேஷ், ஒளிப்பதிவை அருள் வின்சென்ட், படத்தொகுப்பை லாரன்ஸ் கிஷோர், கலைத் துறையை மணிமொழியன் ராமதுரை ஆகியோர் கவனிக்கின்றனர்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி ஆகிய மொழிகளில் இப்படம் வெளியாகவுள்ளது.

சந்தேஷ் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் வினு வெங்கடேஷ் இயக்கத்தில் பிரபுதேவா நடிக்கும் 'வுல்ஃப்' படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளது.